# DISTORTING

DISTORTING
DISTORTING
DISTORTING
DISTORTING
DISTORTING
DISTORTING
DISTORTING




ஐநாவிற்கு எதிரான பரப்புரைக்கு
“காஸ் தொலைஅச்சுக்களை” தவறாக
பயன்படுத்தும் இலங்கை அரசு

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

# ஐநாவுக்கு எதிரான பரப்புரைக்கு “காஸ் தொலையச்சுக்களை” தவறாகப் பயன்படுத்தும் இலங்கை அரசு

2009 ஆம் ஆண்டு சிவில் போரின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களை திசைதிருப்புவதற்காக இலங்கை அரசானது பிரிட்டனின் இராஜதந்திர தொலைஅச்சுக்களை வேண்டுமென்றே திரிபுபடுத்திக்கூறும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளின் இலங்கை பற்றிய பத்து வருடகால அறிக்கைக்களை இல்லாமல் செய்யும் தீவிர நடவடிக்கையாக இது உள்ளது.

பெப்ரவரி 2021 இல், இலங்கை அரசாங்கமானது ஜெனிவாவிலுள்ள தமது குழுவிற்கு “அவதானிப்புகளை” அனுப்பியது இதில் அவர்கள் ஐநா மனித உரிமைகள் சபைக்கான மிச்சேல் பாசலட்டின் 2021 அறிக்கையினை தாக்கும் நோக்குடன் இராஜதந்திர தொலையச்சுக்ளை தவறாகப் பயன்படுத்தியுள்ளார்கள். இந்த தொலையச்சுக்கள் 2009 இலங்கையில் இறுதிப் போரில் கொழும்பில் இருந்த யுகேயினுடைய பாதுகாப்பு அதிகாரி லெப் கேணல் காஸினால் எழுதப்பட்டிருந்தன. அந்த நேரத்தில், போர் முன்னரங்கப் பகுதிக்கு அவர் நேரடியாகச் செல்ல முடியாது என்பதால் அங்கு என்ன நடந்து கொண்டிருந்தது என்பதனை இலண்டனுக்கு அறிவிப்பதற்கு அவர் இலங்கை இராணுவம், ஐநா மற்றும் ஏனைய இராஜதந்திரிகளால் வழங்கப்பட்ட தகவல்களையே காஸ் நம்பியிருந்தார். மேலும், 2009 ஆண்டுக்குரிய காஸின் தொலையச்சுக்களில் சிலவற்றை மாத்திரமே யுகே அரசாங்கம் வெளியிடப்பட்டிருக்கின்றது அத்துடன் அந்த நேரத்தில் இருந்த நிலைமை பற்றிய அவரது கருத்தை மதிப்பீடு செய்வதை கடினமாக்கும் வகையில் அவை கடுமையாக திருத்தி எழுதப்பட்டுள்ளன.

பிரிட்டனின் தொலைஅச்சுக்கள் “முற்றிலும் பெறுமதியானவை” அத்துடன் “அவை கூடியளவு நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மையைக் கொண்ட ஆதாரங்கள்” என இலங்கை அரசு கூறுகின்றது. அடுத்தடுத்து வந்த ஐ நா அறிக்கைகளில் மதிப்பீடு செய்யப்பட்டதை விட 2009 போரில் இறப்பு எண்ணிக்கை மிகவும் குறைவானது என்பதைக் காட்டிய மறைவான தகவலை வெளிப்படுத்துவதற்கும் அத்துடன் இலங்கை இராணுவத்திற்கு எதிரான போர்க் குற்றம் பற்றிய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதற்கும் இந்த தொலை அச்சுக்கள் ஆதரவாக இருந்தன. ஆனால் பெருமளவில் திருத்தியமைக்கப்பட்டிருந்த தொலைஅச்சுக்ககளை தெரிவுசெய்து பயன்படுத்தியதன் அடிப்படையில் இந்த தவறான முடிவு ஏற்பட்டது. இந்த தொலை அச்சுக்களில் சில சமயங்களில் காஸினுடைய எஞ்சிய சொற்கள் சந்தர்ப்பத்திற்கு பொருந்தாதவகையில் குறிப்பிடப்பட்டிருந்தன அல்லது மொத்தமாக புறக்கணிக்கப்பட்டிருந்தன.

சுவாரசியமான வகையில், கீழே காட்டப்பட்டது போல், இதே நம்பத்தகுந்த தொலைஅச்சுக்கள் 2009 பெப்ரவரியின் முற்பகுதியில் இலங்கையில் இருந்த இராஜதந்திரிகள் இலங்கை இராணுவம் போரை நடத்தும்முறை குறித்து தமது கரிசனையை எழுப்பியிருந்ததுடன் இலங்கை இராணுவத்தின் நடவடிக்கைகள் சரியானதாக இல்லை எனவும் அத்துடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறும் விதத்தில் உள்ளன என்ற எச்சரிக்கை உட்பட ஒரு போர் நிறுத்தத்தினை வலியுறுத்தியதையும் அவை வெளிப்படுத்துகின்றன.

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

# காஸின் தொலைஅச்சுக்களை திரிபுபடுத்தும் இலங்கை

## கொத்துக் குண்டுகள்
20 ஜனவரி 2009

**யுகே தொலையச்சு:**

“எந்தக் கொத்துக் குண்டுகளும் பயன்படுத்தப்படுவதில்லை என பாதுகாப்பு செயலாளரிடமிருந்து (கோட்டபாய ராஜபக்ச) எமக்கு அறிக்கை கிடைத்துள்ளது”.

**ITJP கருத்து:**

போரில் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்படவில்லை என்பதை கூறுவதற்கு இந்த தொலைஅச்சு பயன்படுத்தப்பட்டுள்ளது ஆனால் உண்மையில் கோட்டபாய ராஜபக்ச தாம் பயன்படுத்தவில்லை என மறுப்பதை மட்டுமே மேற்கோள்காட்டுகின்றது.

## ஐ நாவின் இடைக்கால இழப்பு எண்ணிக்கை
26 ஏப்பிரல் 2009

**யு கே தொலைஅச்சு:**

“கடந்த 3 மாதங்களில் 6,432 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 19,946 பேர் காயமடைந்ததாகவும் கசிந்த ஐநாவின் இழப்பு எண்ணிக்கைகள் கணிக்கின்றன”.

**ITJP கருத்து:**

6432 என்ற எண்ணிக்கையானது ஐநாவின் ஆரம்ப எண்ணிக்கையாகும், அது காஸினுடைய எண்ணிக்கை இல்லை. இது புதியதல்ல அது 2009 இல் பரவலாக அறிவிக்கப்பட்டதுடன் அந்தச் சந்தர்ப்பத்தில் பூச்சிய பொதுமக்கள் இழப்பு கொள்கையை கொண்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் கடுமையாக எதிர்த்தது. இந்த எண்ணிக்கையானது ஏப்பிரல் 2009 வரையான பிற்போக்கான முக்கோணவழி கணக்கெடுப்பினை மாத்திரம் அடிப்படையாக கொண்டது. (போரின் இரத்தம் தோய்ந்த இறுதி 3 வாரங்கள் உள்ளடக்கவில்லை). 2009 ஜனவரி முதல் மே வரையான காலப் பகுதியில் 17810 பேர் இறந்ததாகவும் 36905 பேர் காயமடைந்ததாகவும் ஐ நா கணக்கிட்டது.

# அசௌகரியமான தொலைஅச்சுக்களை தவிர்க்கும் இலங்கை

## பிழையாக அமைந்திருந்த பாதுகாப்பு வலயங்கள்.

12 மார்ச் 2009

**UK தொலைஅச்சு:**

முதலாவது பாதுகாப்பு வலயம் தொடர்பில் "அமைவிடம் பிழையானது என்பது தெளிவு" என அது கூறுகின்றது

**ITJP கருத்து:**

"அரசாங்கம் பாதுகாப்பு வலயங்களை ஒருதலைப்பட்சமாக அறிவித்தது என ஐநாவின் ( OISL அறிக்கை) உறுதிப்படுத்துகின்றது அத்துடன் பாதுகாப்பு வலயங்களின் அமைவிடத்திற்குப் பின்னாலுள்ள காரணம் மிகவும் கேள்விக்குரியது... சண்டைகளப் பகுதியாக மாறக்கூடிய கணிசமான சாத்தியப்பாட்டைக் கொண்ட ஒரு பிரதேசத்தில் "ஒரு பாதுகாப்பு வலயம்" அமைதல் இலங்கை இராணுவத்தின் நோக்கம் பற்றிய கேள்விகளை எழுப்புகிறது எனக் கூறுகிறது".

## இலங்கைக்கு எதிரான சட்டரீதியான பதில்நடவடிக்கைகள் பற்றி அமெரிக்காவின் அச்சுறுத்தல்

4 பெப்ரவரி 2009

**UK தொலைஅச்சு:**

அமெரிக்க தூதுவர் " வெளிப்படையாகவே பொன்சேகா ( இராணுவத்தளபதி) மற்றும் பாதுகாப்பு செயலாளர் (கோட்டபாய ராஜபக்ச) ஆகியோரை இன்று காலையும் மாலையும் கடுமையான வார்த்தைப் பிரயோகம் மூலம் அச்சுறுத்தினார் ("சட்டரீதியான பதில்நடவடிக்கைகள்" போன்றன)".

**ITJP கருத்து:**

புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீதான 04 பெப்ரவரி 2009 தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்க அரசாங்கமானது போர்க்குற்றம் குறித்து ஆழ்ந்த கரிசனையைக் கொண்டிருந்ததை இந்த தொலைஅச்சு குறிக்கின்றது.

## ஒரு போர் நிறுத்தத்திற்கான நேரம்

28 ஜனவரி 2009

**UK தொலைஅச்சு:**

“இலங்கை இராணுவத்தின் 55 ஆவது படைப்பிரிவுடன் 59 ஆவது படைப்பிரிவு இணைப்பினை ஏற்டுத்தினால் அதன்பின்னர் LTTE இனருக்கு கடல்மார்க்கமான வழி எதுவும் இருக்காது அத்துடன் அவர்கள் ஆளணியினை அல்லது உபகரணங்களை உள்ளேயோ அல்லது வெளியேயோ கொண்டு செல்ல முடியாமலிருக்கும். இது நடைபெற்றதும் போந்நிறுத்தமானது LTTE தன்னை மீளமைத்துக் கொள்ளவும் பலப்படுத்திக் கொள்ளவும் அதற்கு நேரம் கொடுப்பதாக அமையும் என்ற போர் நிறுத்தத்திற்கு எதிரான வாதம் வலுவற்றதாகின்றது. நடவடிக்கை நிறுத்தத்தினை கருத்திற் கொள்ளாமல் இருக்க இராணுவ ரீதியான எந்தக் காரணமும் இருக்காது.

12 மார்ச் 2009 இல் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட கடற்புலிகளின் ஆற்றல் இருக்கலாம் என இன்னுமொரு தொலை அச்சு தெரிவிக்கின்றது அத்துடன் “ நாங்கள் இப்பொழுது வன்னியில் இறுதி ஆட்டத்தை ஆரம்பித்துள்ளோம்”.

**ITJP கருத்து:**

LTTE இனர் மீள்விநியோகம் செய்யமுடியாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில் சண்டை நிறுத்தம் பற்றி இந்த தொலை அச்சு வாதிடுகிறது. 55 ஆவது படைப்பிரிவு 05 பெப்ரவரி 2009 இல் சாலையிலுள்ள கடற்புலிகளின் தளத்தினைக் கைப்பற்றியது, 25 ஜனவரி 2009 இல் 59 ஆவது படைப்பிரிவு முல்லைத்தீவு நகரைக் கைப்பற்றியது. பெரும்பாலும் இந்தச் சந்தர்பத்தில் இருந்து LTTE இனர் கடல் வழியில் இருந்து துண்டிக்கப்பட்டதுடன் மீள்உருவாக்கம் செய்யவும் இயலாது. இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை இராணுவம் இராணுவ வெற்றியைக் கொண்டுள்ளது என்றும் சமநிலையைப் பற்றிய கேள்வியை எழுப்புவதுடன் இது ஒரு போர் நிறுத்தத்திற்கான சரியான நேரம் எனவும் இந்த தொலை அச்சு தெளிவாக காஸின் இராணுவக் கருத்தினை கொண்டுள்ளது . இது பதிலளிப்பதற்கு இலங்கை இராணுவத்திற்கு போர்க்குற்றங்கள் சம்பந்தப்பட்ட விடயமாக பெரும்பாலும் இருக்கின்றது. இலங்கை வெளிப்படையாகவே அதனை புறக்கணித்தது.

## அரசாங்கத்தின் பூச்சிய பொதுமக்கள் இழப்புக் கொள்கையை காஸ் நம்பவில்லை

5 பெப்ரவரி 2009

**UK தொலை அச்சு:**

“முக்கிய விடயம் என்னவெனில் நிச்சயமாக உயர்வாக 3 இலக்க எண்ணிக்கையிலும் சிலவேளைகளில் குறைவாக 4 இலக்க எண்ணிக்கையிலும் கணிசமான எண்ணிக்கையினர் இறந்து கெண்டிருக்கின்றார்கள், தமிழ்நெற்றில் காணப்படுவது போல் ஆயிரக்கணக்கானவர்களோ அல்லது இன அழிப்போ இல்லை, ஆனால் நிச்சயமாக அண்மைவரை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தியது போல் “பூச்சியப் பொதுமக்கள் இழப்புகள்” இல்லை.

**ITJP கருத்து:**

பூச்சியப் பொதுமக்கள் இழப்பு கொள்கையுடன் செயற்பட்டதாக இலங்கை கூறிவருகையில் இது ஒரு முக்கிய விடயமாகும்.